# <u>செங்கல்பட்டு நகராட்சி</u>

## <u>சிறப்பு கூட்டம்</u>

## <u>2022–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16–ஆம் தேதி (16.03.2022) புதன் கிழமை பிற்பகல் 1.30 மணி அளவில் செங்கல்பட்டு நகராட்சி வேதாசலம் கட்டிடத்தில் நடைபெற உள்ள நகர மன்ற கூட்டத்திற்கான பொருள்கள்</u>

பொருள்–1

நகர மன்ற தலைவர் திருமதி.ந.தேன்மொழி அவர்களால் கொண்டுவரப்பட்ட நன்றி தெரிவிக்கும் தீர்மானம்

செங்கல்பட்டு நகர பொது மக்களின் நலன் கருதியும், செங்கல்பட்டு நகராட்சியின் நிர்வாக மேலாண்மையினை உயர்த்தும் விதத்திலும், செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளிலும் இருந்து உறுப்பினர்களை தேர்தெடுக்கவும், இந்தியாவில் 50% சதவீதம் பெண்கள் ஒதுக்கீட்டினை நடைமுறைபடுத்திய சரித்திர நாயகன், பெண் இனத்தின் பாதுகாவலர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் மற்றும் இந்நகராட்சியில், பெண் நகர மன்ற தலைவர், பெண் நகர மன்ற உறுப்பினர்களை தேர்வு செய்யப்பட்டதற்கும் மற்றும் உள்ளாட்சி தேர்தலை நல்லமுறையில் நடத்தி தந்த தமிழக முதல்வர் மற்றும் தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் இயற்றி அதனை அரசுக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

<u>தீர்மான எண்.1 நாள். 16.03.2022</u>

நகரமன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இத்தீர்மானத்தினை தலைவர், துணைத் தலைவர் மற்றும் அனைத்து நகரமன்ற உறுப்பினர்களும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டதால் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் தமிழக அரசுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டு தீர்மானம் இயற்றப்பட்டது. மேலும் இத்தீர்மானத்தினை தமிழக அரசிற்கு அனுப்பி வைக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

நகர மன்ற தலைவர்,
செங்கல்பட்டு நகராட்சி

# செங்கல்பட்டு நகராட்சி

## அவசரக் கூட்டம்

**2022– ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16– ஆம் தேதி (16.03.2022) புதன் கிழமை பிற்பகல் 2.00 மணி அளவில் செங்கல்பட்டு நகராட்சி வேதாசலம் கட்டிடத்தில் நடைபெற உள்ள நகர மன்ற கூட்டத்திற்கான பொருள்கள்**

**பொருள்–1**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் 2021–22ம் ஆண்டு சட்டமன்ற தொடரின் நகராட்சி நிர்வாகத்துறை மானிய கோரிக்கையின் போது அறிவிப்பு எண்.12–ல் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பொதுமக்களின் நலனுக்காகவும், மின்சிக்கனத்தை கருத்தில் கொண்டும் நகரில் ஏற்கனவே உள்ள LED தெருவிளக்குகள் அல்லாத மற்ற தெருவிளக்குகளை மாற்றி குறைந்த ஆற்றலில் அதிக வெளிச்சம் வழங்கக்கூடிய அதிநவீன LED தெருவிளக்குகளாக மாற்றிடும் பொருள் குறித்து பொதுமக்களின் அடிப்படை வசதிகளில் ஒன்றான தெருவிளக்குகளை மாற்றி அமைத்திட அறிக்கை வெளியிட்டதின் பேரில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–28 அவர்களின் கடித ந.க.எண்.27000/2021/WB நாள்.02.03.2022ல் தெருவிளக்குகள் மாற்றி அமைக்கும் பணிகள் மேற்கொள்ள கருத்துரு வழங்கிட கோரப்பட்டது. அதன்பேரிலும் செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குறைந்த ஆற்றலில் அதிக வெளிச்சம் வழங்கிடும் புதிய வகை LED தெருமின்விளக்குகள் அமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.368.48 இலட்சத்திற்கு கீழ்கண்ட பணிகள், அரசு திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ள முழுவடிவிலான கருத்துரு தயார் செய்து நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களுக்கு அனுப்பி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| Sl. No | Catergory | Type of Lamp | Quantity | Rate per unit | Total Cost |
|---|---|---|---|---|---|
| I | **Conversion of Existing Lamps in to LED** | | | | |
| | **LED Street Light** | 48 W FTL to 20W LED | 3146 | 4090.00 | 12867140 |
| | | 65W CFL to 40W LED | 345 | 6330.00 | 2183850 |
| | | 150W SVL to 70W LED | 15 | 13029.00 | 195435 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 250W SVL to 120 W LED | 411 | 18891.00 | 7764201 |
| | | Highmast Existing 400 W Converted to 200 WLED | 18 | 58558.00 | 1054044 |
| | | **Total Light** | **3935** | | **24064670** |
| II | **Street light Controllers (Switches)** | 1 Phase | 177 | 43680 | 7731360 |
| | | 3 Phase | 10 | 54880 | 548800 |
| | | ILM | 444 | 4704 | 2088576 |
| | **Centralized control & Monitoring centre (CCMC)** | | **631** | 1168 | **1168526** |
| | **Grand Total - Cost** | | | | **35601932** |
| | Add GST | | | 0.00% | 0 |
| | LWF (Labour Welfare Fund) | | | 1.00% | 356019 |
| | conversion charges for TANGEDCO | | | 2.50% | 890048 |
| | **Total Cost of the Project** | | | | **36848000** |

அ.கு:–

நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி பணிக்கான கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களுக்கு அனுப்பி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.0446/2020/இ1**

**<u>தீர்மான எண்.2 நாள். 16.03.2022</u>**

நகர மக்களின் நலன் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதிப்பெற்று நடவடிக்கை மேற்க்கொண்டதை அங்கீகரிக்கப்பட்டது.

பொருள்–2

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள ஜி.எஸ்.டி சாலை பேருந்து நிழற்குடை பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் நமக்கு நாமே திட்டம் 2022 கீழ் பணிகள் மேற்கொள்ள அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறவும் நிர்வாக அனுமதி வேண்டி, நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை–28 அவர்களுக்கு அனுப்பி வைப்பதற்கும், மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:—

நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.2177/2021/இ1**

**<u>தீர்மான எண்.3 நாள். 16.03.2022</u>**

அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்க்கொண்டதை அங்கீகரிக்கப்பட்டது.

பொருள்—3

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள புதிய பேருந்து நிலையத்தில் பொது மக்களின் குடிநீர் தேவைக்காக RO Plant அமைக்கும் பணிக்கு ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் நமக்கு நாமே திட்டம் 2022 கீழ் பொது மக்கள் பங்களிப்பாக செங்கல்பட்டு நகர வணிக சங்கத்தினர் சார்பாக ரூ.1.50 இலட்சம் வழங்கப்பட்டது. மேற்படி பணிகள் மேற்கொள்ள அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறவும் நிர்வாக அனுமதி வேண்டி, நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை—28 அவர்களுக்கு அனுப்பி வைப்பதற்கும், மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:—

நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மான எண்.4 நாள். 16.03.2022</u>**

அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்க்கொண்டதை அங்கீகரிக்கப்பட்டது.

**நகர மன்ற தலைவர்,**
**செங்கல்பட்டு நகராட்சி**

# செங்கல்பட்டு நகராட்சி

## அவசரக் கூட்டம்

## 2022– ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31– ஆம் தேதி (31.03.2022) வியாழன் கிழமை பிற்பகல் 2.00 மணி அளவில் செங்கல்பட்டு நகராட்சி வேதாசலம் கட்டிடத்தில் நடைபெற உள்ள நகர மன்ற கூட்டத்திற்கான பொருள்கள்

பொருள்–1

**தமிழ்நாடு அரசு சட்ட மன்ற பேரவை 2017–18 ஆம் ஆண்டு கோரிக்கை எண்.26–ன் படியான அறிவிப்பு :**

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் எல்லை விரிவாக்கத்திற்கென செங்கல்பட்டு மாவட்டத்தைச் சார்ந்த உள்ளாட்சி அமைப்புகளை இணைத்தல் குறித்து சட்டமன்ற பேரவையில் 03.07.2017 அன்று மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி செங்கல்பட்டு மாவட்டத்தை சார்ந்த செங்கல்பட்டு நகராட்சியில் அடங்கிய பின்வரும் 6 வருவாய் கிராமங்கள் உள்ளது. இதனை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும (CMDA) எல்லையுடன் இணைத்திட கருத்துரு வழங்குமாறு நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார். எனவே, இந்நகராட்சியில் அமைந்துள்ள ஆறு வருவாய் கிராமங்கள்

1. நத்தம் (பகுதி)
2. குண்டூர்
3. செங்கல்பட்டு
4. மேலமையூர் (பகுதி)
5. வெண்பாக்கம் (பகுதி)
6. அனுமந்தப்புத்தேரி (பகுதி)

பார்வை:

1. அரசு நே.மு.க.எண்.14627/UD1/2021-4, நாள்.16.02.2022.
2. CMDA கடித எண்.C1/11127/2017, நாள்.04.03.2022 (addressed to PS to Govt. H & UD Department, Secretariat.)

மேற்கண்ட கிராமங்களை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும (CMDA) எல்லையுடன் இணைத்திட மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்.5 நாள். 31.03.2022**

மன்ற பொருளில் கண்டுள்ள கிராமங்களை சென்னை பெருநகர வளர்ச்சி குழும (CMDA) எல்லையுடன் இணைத்திட மன்றம் ஏகமனதாக ஒப்புதல் அளித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நகர மன்ற தலைவர்,
செங்கல்பட்டு நகராட்சி

செங்கல்பட்டு நகராட்சி

மறைமுக தேர்தல்

**2022–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31–ஆம் தேதி (31.03.2022) நடைபெற்ற வரிமேல் முறையீட்டுக் குழு, நியமாக் குழு, ஒப்பந்த குழு மறைமுக தேர்தலுக்கு வருகை புரிந்த உறுப்பினர்கள் விவரம்**

பொருள்–1

2022–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31–ஆம் தேதி வியாழக்கிமை முற்பகல் 9.30 மணிக்கு ஒன்றன்பின் ஒன்றாக செங்கல்பட்டு நகரமன்ற கூடத்தில் நகராட்சி ஆணையர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மறைமுக தேர்தல் (வரி மேல் முறையீட்டு குழு, நியமனக்குழு, ஒப்பந்தக்குழு) கூட்டத்திற்கான நடவடிக்கைகள்.

<u>தீர்மான எண்.6 நாள். 31.03.2022</u>

இன்று (31.03.2022) வியாழக்கிழமை காலை 9 மணியில் இருந்து ஒன்றன்பின் ஒன்றாக வரிமேல் வரி மேல் முறையீட்டு குழு, நியமக்குழு, ஒப்பந்தக்குழு உறுப்பினர்களை தேர்வு செய்ய மறைமுக தேர்தல் கூட்டம் நடைபெற்றது. இதில் 26 (தலைவர், துணைத் தலைவர் உட்பட) உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

கலந்துகொண்ட அனைத்து நகரமன்ற உறுப்பினர்களையும் (தலைவர் துணைத்தலைவர் உட்பட) வேட்பு மனு பெற்றுக்கொள்ள விருப்பமுள்ளவர்கள் வேட்புமனு பெறலாம் என தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் தெரிவிக்கப்பட்டதற்கு கீழ்கண்டுள்ள உறுப்பினர்கள் வேட்பு மனு பெற்றுக்கொண்டு வரி மேல் முறையீட்டு குழு, நியமனக்குழு, ஒப்பந்தக்குழு ஆகியவற்றிற்கு போட்டியிட்டனர். போதிய கால அவகாசம் வழங்கப்பட்டிருந்த நிலையில் வேறு முறையீட்டு குழுவிற்கு 4 நபர்கள் மட்டும் வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்ட நிலையில் அவர்களை போட்டியின்றி ஏகமனதாக வரிமேல் முறையீட்டு குழு உறுப்பினர்களாக தேர்வு செய்யப்பட்டதாக தேர்தல் நடத்தும் அலுவலர் அவர்களால், அறிவிக்கப்பட்டு தீர்மானம் இயற்றப்பட்டது.

**வரிமேல் முறையீட்டு குழுவிற்கு தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்கள்**

| வ.எண் | உறுப்பினர் பெயர் | வார்டு எண். |
|---|---|---|
| 1 | திருமதி.டி.பவித்ரா | 3 |
| 2 | திரு.S.பிரபுவேல் | 8 |
| 3 | திரு.R.ராஜி | 23 |
| 4 | திரு.ஜி.சந்தோஷ்கண்ணன் | 33 |

மேலும், நியமனக் குழு உறுப்பினர் பதவிக்கு திரு.C.K.V. கிருஷ்ணமூர்த்தி என்பவர் மட்டும் வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டதால், அவரை போட்டியின்றி ஏகமனதாக நியமனக் குழு உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டதாக தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால், அறிவிக்கப்பட்டு தீர்மானம் இயற்றப்பட்டது.

நியமனக் குழுவிற்கு தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்

| வ.எண் | உறுப்பினர் பெயர் | வார்டு எண். |
| --- | --- | --- |
| 1 | திரு.C.K.V. கிருஷ்ணமூர்த்தி | 2 |

மேலும், ஒப்பந்தக்குழு உறுப்பினர் பதவிக்கு திருமதி.K.C.ஸ்ரீசந்தியா என்பவர் மட்டும் வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டதால், அவரை போட்டியின்றி ஏகமனதாக ஒப்பந்தக்குழு உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டதாக தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால், அறிவிக்கப்பட்டு தீர்மானம் இயற்றப்பட்டது.

ஒப்பந்தக்குழுவிற்கு தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்

| வ.எண் | உறுப்பினர் பெயர் | வார்டு எண். |
| --- | --- | --- |
| 1 | திருமதி.K.C.ஸ்ரீசந்தியா | 11 |

தேர்தல் நடத்தும் அலுவலர்,
செங்கல்பட்டு நகராட்சி